# வருடாந்த செயலாற்றுகை அறிக்கை

# 2014

அனர்த்த முகாமைத்துவ அமைச்சு

## முன்னோட்டம்

அனர்த்த முகாமைத்துவத்யதுவ அமைச்சின் 2014 ஆம் ஆண்டிற்கான செயலாற்றுகை அறிக்கை நிதித் சுற்றறிக்கை இல - 402 ன் மூலம் வழங்கப்பட்டிருக்கும் அறிவுறுத்தல்களுக்கமைய தயார் செய்யப்பட்டுள்ளது.

இந்த அறிக்கையின் பகுதி 1 இல் பொதுவான தகவல் ஒட்டுமொத்த நிதித்திறன் மற்றும் 2014 தை மாதம் முதல் மார்கழி மாதம் வரையான காலப்பகுதி அமைச்சின் நடவடிக்கை பற்றி விவரிக்கிறது.

அறிக்கை 11

2014 ல் தேசிய அனர்த்த நிவாரண சேவை மையத்தின் மேற்பார்வையின் கீழான நடவடிக்கைகளையும் செயல்திறன்களையும் விவரிக்கின்றது.

## அறிமுகம்

இலங்கைவாழ் மக்கள் முன்னொருபோதும் சந்தித்திராத நிகழ்வாக, 2004 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 26 ஆம் திகதி ஏற்பட்ட சுனாமி பேரழிவினால் முப்பத்தைந்தாயிரத்திற்கும் அதிகமான உயிர்கள் காவுகொள்ளப்பட்டமை, அனர்த்த முகாமைத்துவம் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாக மாறுவதற்கு காரணமாயிற்று. இப்பேரழிவினால் 05 இலட்சத்திற்கும் அதிகமான மக்கள் உள்நாட்டில் இடம் பெயரவேண்டிய நிலை உருவானது.

இவ்வாறான உயிர்ச்சேதங்கள், பொருளாதாரப் பின்னடைவு மற்றும் சமூகத்திற்கு அதனாலான தாக்கம் தொடர்பில் நலனோம்புகைப் பணியாக மேற்கொள்ளப்பட்டு வந்த அனர்த்த முகாமைத்துவ விடயப்பரப்பிற்கு உரிய முறைவழி மற்றும் சட்டரீதியான ஒரு கட்டமைப்பின் தேவை உணரப்பட்டது. எனவே, இதுபோன்ற அனர்த்தங்களை வெற்றிகரமாக எதிர்கொள்ளத் தேவையான நிறுவன மற்றும் சட்டரீதியான கட்டமைப்பினை நிறுவுவதற்காக பாராளுமன்றத் தெரி குழுவொன்று அமைக்கப்பட்டது. அந்த தெரி குழுவின் சிபாரிசுகளின்படி 2005 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க இலங்கை அனர்த்த முகாமைத்துவச் சட்டம் பாராளுமன்றத்தினால் நிறைவேற்றப்பட்டது.

அதன்படி, 2005 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க இலங்கை அனர்த்த முகாமைத்துவச் சட்டத்தின் மூலம் அனர்த்த முகாமைத்துவ தேசிய சபையும், அனர்த்த முனாமைத்துவ நிலையமும் தாபிக்கப்பெற்றன. இந்த நிறுவனங்களை மேலும் வலுப்படுத்தும் நோக்கத்துடன் 2006 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 20 ஆம் திகதி வெளியிடப்பட்ட அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையின் மூலம் தாபிக்கப்பட்ட அனர்த்த முகாமைத்துவ மற்றும் மனித உரிமைகள் தொடர்பான அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சானது, 2010 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 30 ஆம் திகதிய விசேட வர்த்தமானப் பத்திரிகை மூலம் அனர்த்த முகாமைத்துவ அமைச்சு எனப் பெயரிடப்பட்டு தேசிய அனர்த்த சேவைகள் நிலையம் அதன் கீழ் கொண்டுவரப்பட்டது. அதிமேதகு சனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அவர்கள் 2010 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 19 ஆம் திகதி இரண்டாவது பதவி காலத்திற்கான சத்தியபிரமாணம் செய்து கொண்டதையடுத்து மேற்கொள்ளப்பட்ட அமைச்சரவை மாற்றத்தில் அனர்த்த முகாமைத்துவ அமைச்சராக மாண்புமிகு மஹிந்த அமரவீர அவர்களும், பிரதி அமைச்சராக மாண்புமிகு டுலிப் வீஜேசேகர அவர்களும் 2010 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 22 ஆம் திகதி கடமைகளைப் பொறுப்பேற்றுக் கொண்டார்கள்.2010 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 23 ஆம் திகதி அமைச்சின் செயலாளராக திருமதி. எஸ். எம். மொஹமட் கடமைகளைப் பொறுப்பேற்றுக்கொண்டார்

அனர்த்த முகாமைத்துவத்தில் அமைச்சுக்குக் கீழ் காணப்படும் தேசிய அனர்த்த நிவாரண சேவைகள் நிலையம், வளி மண்டளவியல் திணைக்களம், தேசிய கட்டிடங்கள் ஆராய்ச்சி நிறுவனம், மற்றும் அனர்த்த முகாமைத்துவ நிலையம் என்பவற்றின் மூலம் அமைச்சினால் செயல்படுத்தப்படும் நடவடிக்கைகளினால் பேரழிவு மற்றும் பேரழிவுக்கு முன் பாரிய சேவை மேற்கொள்ளப்படுகின்றது. இதனால் அனர்த்தங்களின் போது மனித உயிர்கள், உடமைகள் மற்றும் சேவைகளை பாதுகாத்தல், பாதுகாக்கப்பட்ட எதிர்கால சமூகத்தை உருவாக்கல் மற்றும் அனர்த்தக் குறைப்பு வேலைத்திட்டத்தை அமுல்படுத்தல் போன்ற திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படும்.

அமைச்சின் நேரடியான மேற்பார்வை, வழிகாட்டல் மற்றும் வசதிகளின் கீழ் தேசிய அனர்த்த சேவைகள் நிலையம் 2013 ஆம் ஆண்டில் கீழ்க் குறிப்பிட்டுள்ள பணிகளை நிறைவேற்றியுள்ளது.

- ✓ பாதிக்கப்பட்ட மக்களுக்குத் தேவையான நிவாரணங்களை வழங்குதல்

- ✓ அனர்த்தங்களினால் பாதிக்கப்படும் மக்களுக்கான கருத்திட்டங்களைக் கண்டறிதல், திட்டமிடல் மற்றும் செயற்படுத்தல் (மழைநீர்த் தாங்கி அமைத்தல் போன்றனளு)

- ✓ இயற்கை மற்றும் மனிதனின் செயற்பாடு காரணமாக நிகழும் அனர்த்தங்களினால் பாதிக்கப்படும் மக்களின் வாழ்வாதாரம் மற்றும் பொருளாதார நிலைமைகளை வழமைக்குக் கொண்டு வருவதற்கான புனரமைப்பு நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்தல்.

- ✓ வரட்சியால் ஏற்படும் பாதிப்புகளைக் கட்டுப்படுத்துவதற்காக நீர் வினியோகம் மற்றும் வரட்சி நிவாரண நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்தல்.

- ✓ அனர்த்த நிலைமைகள் தொடர்பான தரவுகளைச் சேகரித்தல் மற்றும் வெளியிடுதல்.

- ✓ அனர்த்த நிலைமைகளை எதிர்கொள்ளும் விதம் மற்றும் நிவாரணப் பொறிமுறை தொடர்பாக அரச அலுவலர்களையும் பொதுமக்களையும் விழிப்புணர்வு செய்யும் நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்தல்.

- ✓ திடீர் அனர்த்த நிலைமையொன்றில் நிவாரண நடவடிக்கைகளை இணைப்பாக்கம் செய்தல்

- ✓ ஏற்பாட்டுச் சேவைகளை வழங்குதல

## நோக்கு

“பாதுகாப்பானதோர் இலங்கை”

## இலட்சியப் பணி

“இலங்கையில் இயற்கையாக அல்லது மனிதனின் செயற்பாடுகள் காரணமாக நிகழும் அனர்த்தங்களால் ஏற்படக்கூடிய பிரதிகூலமான தாக்கங்களை பயன்தரும் வகையில் தடுத்தல் மற்றும் கட்டுப்படுத்துவதன் மூலம் சுபிட்சமானதும் உன்னதமானதுமான வாழ்க்கை முறையை உறுதி செய்தல்”.

## குறிக்கோள்கள்

- ✓ தேசிய அனர்த்த முகாமைத்துவ கொள்கையை தயாரித்தலும் நடைமுறைப்படுத்தலும்
- ✓ முன்னெச்சரிக்கை மற்றும் பரப்புவதற்கான பொறிமுறையை செயற்படுத்தல்
- ✓ எல்லா மட்டங்களிலும் அனர்த்த முகாமைத்துவ திட்டத்தை தயாரித்தலும் செயற்படுத்தலும்
- ✓ அபிவிருத்தி திட்டங்களில் அனர்த்த அபாய தணிப்பு நடைமுறையை பின்பற்றல்
- ✓ அபிவிருத்தி வேலைத்திட்டங்களில் அனர்த்த பாதிப்பு மதிப்பிடலை பின்பற்றல்
- ✓ அனர்த்த அபாய தணிப்பு வேலைத்திட்டங்களை செயற்படுத்தல்
- ✓ மண்சரிவு அபாய மதிப்பீடுகளையும் தடைநீக்கலையும் வழங்குதல்
- ✓ அனர்த்ங்களுக்கு தாக்குப்பிடிக்கும் மாதிரி வீட்டு அலகுகள் மற்றும் வழிகாட்டிகளை தயாரித்தல்
- ✓ அனர்த்தத்தினால் பாதிக்கப்படுவோருக்காக நிவாரணம் வழங்கல்
- ✓ அனர்த்த முகாமைத்துவ ஆய்வு மற்றும் அபிவிருத்தி வேலைத்திட்டங்களை நிகழ்த்துதல்
- ✓ அனர்த்தத்துக்கு பின்னரான புனருத்தாபனம் மற்றும் புனர்நிர்மானம்

**பணிகள்**

இந்த குறிக்கோள்களை அடைவதற்காக 2010 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 22 ஆம் திகதி வெளியிடப்பட்ட அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகை மூலம் அமைச்சிடம் கீழ் வரும் பணிகள் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

- இயற்கை அனர்த்தங்கள் மற்றும் மனிதனின் செயற்பாடுகள் காரணமாக ஏற்படும் அனர்த்தங்களின் போது நிவாரணம் வழங்கும் செயற்பாடுகளை முகாமைத்துவம் செய்தலும் இணைப்பாக்கம் செய்தலும்.

- அனர்த்தங்களைக் கட்டுப்படுத்தல், எதிர்கொள்ளுதல் மற்றும் வழமை நிலைக்குக் கொண்டு வருதல் தொடர்பான கொள்கைகள், நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்ளைத் தயாரித்தல்.

- சம்பந்தப்பட்ட நோக்கங்களை அடைந்துகொள்வதற்கான தேசியத் திட்டங்ளையும், நிகழ்ச்சித்திட்டங்களையும், கருத்திட்டங்களையும் அதிகாரிகளுடன் உடன்பட்டுக்கொண்ட கால எல்லை மற்றும் வரவு செலவுத் திட்டத்தில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள வளங்களுக்கமைய நடைமுறைப்படுத்தலும் நெறிப்படுத்தலும்.

- தேியக் கொள்கையின் அடிப்படையில் அமைந்த தேசிய அனர்த்த முகாமைத்துவ திட்டத்தையும், அவசர நிலைமைகளில் தொழிற்படுத்தும் திட்டங்களையும் தயாரித்தல்.

- அனர்த்தங்களைக் கட்டுப்படுத்தல், எதிர்கொள்ளுதல் மற்றும் இயல்பு நிலைக்கு கொண்டு வருதல் தொடர்பில் வெளிநாட்டு உதவிக் கருத்திட்டங்களை ஆரம்பித்தல் மற்றும் இணைப்பாக்கம் செய்தல்.

- மேற்படி பணிகள் உரிய நேரத்தில் நடைபெறுவதை உறுதி செய்து கொள்வதற்காக அமைச்சுக்கள் மற்றும் அரச நிறுவனங்களுடன் இணைப்பாக்கப் பணிகளை மேற்கொள்ளுதல்.

- இயற்கை அனர்த்தங்கள் மற்றும் மனிதனால் மேற்கொள்ளப்படும் அழிவுகள் காரணமாக ஏற்படும் அனர்த்தங்கள் தொடர்பாக விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித்திட்டங்களை இணைப்பாக்கம் செய்தல்.

- வெள்ளப்பெருக்கு, வரட்சி, கொள்ளை நோய்கள் உட்பட்ட ஏனைய விசேட காரணங்களால் ஏற்படும் அனர்த்தங்களின் போது நிவாரணம் வழங்குதல்.

- இயற்கை அனர்த்தங்கள் மற்றும் மனிதனால் மேற்கொள்ளப்படும் அழிவுகளின் போது மீட்பு நடவடிக்கைகளில் ஈடுபடுதல்.

- அனர்த்த முன்னெச்சரிக்கை கட்டமைப்புகளை செயற்படுத்தல்.

- வீடுகள், கட்டட நிர்மாண தொழிற் துறையின் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகள்.

- வானிலை தொடர்பான மதிப்பீடுகளும் ஆராய்ச்சிப் பணிகளும்.

- அமைச்சின் கண்காணிப்பில் இயங்கும் நிறுவனங்களில் ஏனைய அனைத்து விடயங்களையும் மே
- ற்பார்வை செய்தல்.

பகுதி 1


| | | |
|---|---|---|
| 01 | நிருவாக நடவடிக்கைகள | 01-10 |
| 02 | திட்டமிடலும் அபிவிருத்திப் பணிகளும | 11 - 13 |
| 03 | கணக்கீட்டு நடவடிக்கைகள் | 14- 15 |
| 04 | பெறுகைகள் கோரல | 16 |
| 05 | உள்ளக கணக்காய்வு பணிகள | 17 |


பகுதி II


தேசிய அனர்த்த நிவாரண சேவைகள் நிலையம் 18-42

# 01. நிருவாக நடவடிக்கைகள்

✓ பணியாட்தொகுதி

| தொ இல | பதவிப் பெயர் | அங்கீகரிக்கப்பட்ட பதவி அணி | துற்போதைய பதவி அணி | வெற்றிடங்களின் எண் |
|---|---|---|---|---|
| 1 | செயலாளர் | 1 | 1 | 0 |
| 2 | மேலதிகச் செயலாளர்(அ.நி. சே) | 1 | 1 | 0 |
| 3 | மேலதிகச் செயலாளர் (நிதி, நிருவாகம்) | 1 | 1 | 1 |
| 4 | மேலதிக உதவிச் செயலாளர் | 1 | 1 | 0 |
| 5 | பிரதான கணக்காளர் | 1 | 1 | 0 |
| 6 | பணிப்பாளர் (அனர்த்த நிவாரண சேவை) | 1 | 1 | 0 |
| 7 | பணிப்பாளர் ((முகாமைத்துவம்) | 1 | 1 | 0 |
| 8 | பணிப்பாளர் (திட்டம்) | 1 | 1 | 0 |
| 9 | பணிப்பாளர் (தேசிய அனர்த்த மு.சபை) | 1 | 0 | 1 |
| 10 | உதவிச் செயலாளர் | 2 | 2 | 0 |
| 11 | கணக்காளர் | 1 | 1 | 0 |
| 12 | கணக்காளர் (அகக் கணக்காய்வாளர்) | 1 | 0 | 1 |
| 13 | பி.பணிப்/உ.பணிப் (முகாமைத்துவம்) | 1 | 1 | 0 |
| 14 | பி.பணிப் /உ.பணிப் (திட்ட) | 1 | 1 | 0 |
| 15 | பி.பணிப் /உ.பணிப்(அ நி. சே.) | 3 | 2 | 1 |
| 16 | சட்ட உத்தியோகத்தர் | 1 | 1 | 0 |
| 17 | நிருவாக உத்தியோகத்தர் | 1 | 1 | 0 |
| 18 | செயலாளரின் இணைப்புச் செயலாளர் | 1 | 1 | 0 |
| 19 | மோழி பெயர்ப்பாளர் | 2 | 0 | 2 |
| 20 | அபிவிருத்தி அலுவலர் | 1 | 1 | 0 |
| 21 | அபிவிருத்தி உதவியாளர் | 8 | 8 | 0 |
| 22 | அபிவிருத்தி அலுவலர் (தரம் III ) | 30 | 24 | 6 |
| 23 | அரசாங்க முகாமைத்துவ உதவியாளர் | 20 | 14 | 6 |
| 24 | தரவுப் பதிவு செயற்படுத்துநர் | 1 | 0 | 1 |
| 25 | தொழில்நுட்ப அலுவலர் | 1 | 1 | 0 |
| 26 | நிழற்படக் கலைஞர் | 1 | 0 | 1 |
| 27 | ஒளிப்படக் கருவி (இயக்குநர்) | 1 | 0 | 1 |
| 28 | உதவி ஒளிப்படக் கருவி இயக்குநர் | 1 | 1 | 0 |
| 29 | சாரதி | 15 | 11 | 04 |
| 30 | அலுவலக உதவியாளர் | 15 | 11 | 04 |
| | **மொத்தம்** | **117** | **89** | **28** |

- ✓ **இடமாற்றம் / ஓய்வுபெறல்**

2014 ஜனவரி மாதம் தொடக்கம் அதே வருடம் டிசெம்பர் மாதம் வரை அமைச்சு ஊழியர்கள் 10 பேர் வேறு இடங்களுக்கு இடமாற்றம் பெற்றுள்ளதுடன் அமைச்சுக்கு இடமாற்றம் பெற்று வந்த ஊழியர்களின் எண்ணிக்கை 09 ஆகும்.

- ✓ **பாராளுமன்ற ஆலோசனைக் குழுக்கூட்டங்கள்**

2014ஆம் ஆண்டு அனர்த்த முகாமைத்துவ அலுவல்கள் தொடர்பான 06 செயற்குழுக் கூட்டங்கள் நடைபெற்றதுடன் அதன்போது அமைச்சிடம் முன்வைக்கப்பட்ட 15 யோசனைகள் தொடர்பாக பதில்கள் வழங்கப்பட்டன.

- ✓ **அனர்த்த முகாமைத்துவச் சட்டத்தை திருத்துதல்**

இந்த சட்டம் 2005ஆம் ஆண்டு தொடக்கம் வலுவில் இருப்பதுடன் நடைமுறை ரீதியாக சட்டத்தை அமுல்படுத்துவதில் ஏற்பட்ட பிரச்சினைகளை குறைத்துக்கொள்வதற்காக உள்ளடக்கப்பட்ட திருத்தங்களுடன் கூடிய சட்ட நகல் சட்டவரைஞர் திணைக்களத்தினால் தயாரிக்கப்பட்டுள்ளதுடன் சட்டமா அதிபரின் அனுமதிக்காக தற்போது சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. சட்டம் திருத்தப்பட்டதன் பின்னர் மனிதர்களால் ஏற்படுத்தப்படும் அனர்த்தங்கள் மற்றும் இயற்கை அனர்த்தங்களை மிகவும் பயனுள்ள முறையில் முகாமைத்துவம் செய்து கொள்வதற்கான வாய்ப்புக் கிடைக்க உள்ளது.

- ✓ **தேசிய அனர்த்த முகாமைத்துவக் கொள்கை**

மிகவும் வினைத்திறன்மிக்க மற்றும் பயனுள்ள வகையில் அனர்த்தங்களை முகாமைத்துவம் செய்யும் பொருட்டு அதற்கான வாய்ப்புக் கிட்டும் வகையில் அமைச்சினால் அனர்த்த முகாமைத்துவக் கொள்கைத்திட்டம் தயாரித்து முடிக்கப்பட்டுள்ளதுடன் அதற்காக அமைச்சரவை அனுமதியும் கிடைத்துள்ளது. தற்போது இதனை அச்சிடும் பணிகள் நிறைவடைந்துள்ளன.

- ✓ **தேசிய கட்டட ஆராய்ச்சி அமைப்பின் சட்டம்**

தேசிய கட்டட ஆராய்ச்சி அமைப்புக்கு சட்டப்படியான அதிகாரம் வழங்கும் பொருட்டு 2011இல் ஆரம்பிக்கப்பட்ட தேசிய கட்டிட ஆய்வு அமைப்புக்கான சட்டமூல நகல் தற்போது சட்டவரைஞர் திணைக்களத்தினால் தயாரிக்கப்பட்டு பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. இந்த சட்டமூல நகல் சட்டமா அதிபரின் அனுமதிக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இலாபமீட்டும் நிறுவனமான தேசிய கட்டிட ஆராய்ச்சி அமைப்புக்கு சட்டப்படியான அந்தஸ்து வழங்குவதன் மூலம் மண்சரிவு ஆயத்துக்களை குறைப்பதற்கான ஆராய்ச்சிகள், வெளிக்கள ஆய்வுகள்

உட்பட சம்பந்தப்பட்ட பணிகளை வெற்றிகரமாக பயனுள்ள வகையில் பூர்த்தி செய்வதற்காக அந்த நிறுவனத்தினால் வழங்கப்படும் தொழில்நுட்ப சேவைகளை ஆகக்கூடியளவில் வழங்குவதற்கும் முடியும். அதேபோன்று நிறுவனத்தினால் பணம் சம்பாதிக்கும் ஆற்றலும் அதிகரிக்கும்.

- ✓ **இலங்கை இடிமின்னல் பாதுகாப்புச் சட்டம்**

இலங்கையில் தற்போது இடிமின்னல்களினால் ஏற்படும் விபத்துக்கள் அதிகரித்துள்ளமையினால் 2013 மே மாதம் 17ஆந் திகதிய அமை.பத்திரம் /12/0598/548/002ஆம் இலக்க அமைச்சரவைத் தீர்மானத்தின்படி இடிமின்னல் பாதுகாப்பு தொடர்பான தேசிய நிலையம் ஏற்படுத்தப்படல் மற்றும் இடிமின்னல் பாதுகாப்புத் தொடர்பான சட்டங்களை விதிப்பதற்கான சட்டமூலமொன்றை தயாரிப்பதற்கான குழுவொன்றும் நியமிக்கப்பட்டுள்ளதுடன் முதலாவது அமைச்சரவை தீர்மானத்தில் காணப்படும் குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்காக மீண்டும் அமைச்சரவைப் பத்திரம் ஒன்று சமர்ப்பிக்கப்பட உள்ளது. தற்போது அனர்த்த அமைச்சரவை தீர்மானம் தொடர்பாக இடிமின்னல் விபத்துக்கள் தொடர்பான இடைக்கால குழு வளிமண்டலவியல் திணைக்களத்தினால் நிறுவப்பட்டுள்ளதுடன் இதன் மூலம் இலங்கையில் இடிமின்னலினால் ஏற்படும் உயிர்ச்சேதங்கள் மற்றும் பொருட்சேதங்கள் போன்றவற்றை குறைத்துக் கொள்வதற்காக அதற்கான ஆற்றலை மேம்படுத்துவதற்கான அறிவூட்டல் மற்றும் ஆலோசனைகளை வழங்கும் செயற்பாடுகள் இடம்பெற்று வருகின்றன. இது பாதுகாப்பான சமுதாயமுள்ள நாடொன்றை உருவாக்க வழிவகுக்கும்.

- ✓ **சட்ட நடவடிக்கைகள்**

2014ஆம் ஆண்டுக்குள் அமைச்சுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை (01) ஆகும் என்பதுடன் முன்னைய வருடத்தின் வழக்கு விசாரணைகளுடன் இம்முறை தோற்றிய வழக்கு விசாரணைகளின் எண்ணிக்கை ஒன்பதாகும் (09) ஆகும். இந்த வழக்கு விசாரணைகள் தொடர்ந்தும் இடம்பெற்று வருகின்றன.

**இடைக்கால முகாமைத்துவக்குழுக் கூட்டங்களை நடாத்துதல்**

- ✓ **தேசிய கட்டிட ஆய்வு அமைப்பு**

2007.03.13ஆந் திகதிய 07/0435/343/002ஆம் இலக்க அமைச்சரவைப் பத்திரம் மூலம் அனுமதி கிடைத்து இந்த குழு நியமிக்கப்பட்டது. தேசிய கட்டிட ஆய்வுகள் அமைப்பின் நிர்வாக, நிதி மற்றும் முகாமைத்துவ அதிகாரங்களை நடைமுறைப்படுத்தல் மற்றும் ஏனைய முக்கிய தீர்மானங்களை எடுக்கும் பொருட்டு நிறுவப்பட்ட இடைக்கால நிறுவனக்குழு மாதத்துக்கொரு தடவை அனர்த்த முகாமைத்துவ அமைச்சின் செயலாளரின் தலைமையில்

கூடுகின்றது. எட்டு உறுப்பினர்களைக் கொண்ட இந்தக் குழு 2014இல் 12 கூட்டங்களை நடாத்தி உள்ளதுடன் அதில் எடுக்கப்படும் தீர்மானங்களுக்கமைய தேசிய கட்டிட ஆய்வு அமைப்பினால் வழங்கப்படும் சேவைகளை மிகவும் செயலாற்றுத்திறனுடன் மேற்கொள்ள முடிந்தது.

- ✓ **அனர்த்த முகாமைத்துவ நிலையம்**

அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் நல்லாட்சி, முகாமைத்துவம் மற்றும் நிதி நிருவாகத்தை முறைப்படுத்தும் நோக்குடன் இந்த இடைக்கால முகாமைத்துவக்குழு நியமிக்கப்பட்டது. அரச தொழில் முயற்சிகளின் நல்லாட்சிக்கான வழகாட்டிக் கோவையின் ஏற்பாடுகளுக்கமைய இது நிறுவப்பட்டுள்ளது. இந்த நிறுவனம் அனர்த்த முகாமைத்துவ அமைச்சின் செயலாளரின் தலைமையிலான 07 உறுப்பினர்களை கொண்டிருப்பதுடன் அதன் மூலம் மேற்கூறிய ஏற்பாடுகளுக்கமைய தீர்மானங்களை எடுத்தல் வழிநடாத்தல், மேற்பார்வை செய்தல் என்பன இடம்பெறுகின்றன. (2014இல் 10 கூட்டங்கள் நடத்தப்பட்டன).

- ✓ **சர்வதேச மற்றும் பிராந்திய ஒத்துழைப்பு**

சர்வதேச மற்றும் பிராந்திய ஒத்துழைப்பினை மேம்படுத்தும் வகையில் அனர்த்த முகாமைத்துவம், மக்களுக்கு நிவாரணங்களை வழங்குதல், அனர்த்த முகாமைத்துவச் சட்டம், காலநிலை மாற்றங்களுடன் இலங்கை மீது செல்வாக்கு செலுத்தக்கூடிய பல்வேறு அழுத்தங்கள் தொடர்பாக பிராந்திய நாடுகளின் அறிவு மற்றும் ஒத்துழைப்பினை பெற்றுக்கொள்ளும் வகையில் அமைச்சினை பிரதிநிதித்துவப்படுத்தி அமைச்சுக்குரிய நான்கு நிறுவனங்களின் பிரதிநிதிகள் மற்றும் செயலாளர், மற்றும் கௌரவ அமைச்சரினால் விசேட பணிகள் ஆற்றப்பட்டுள்ளன.

- ✓ **மக்கள் முறைப்பாடுகள்**

2014 இல் அமைச்சுக்கு அனர்த்தங்கள் தொடர்பாக 25 முறைப்பாடுகள் கிடைத்தவுடன் அந்த முறைப்பாடுகள் அமைச்சின் கீழ் உள்ள அனர்த்த முகாமைத்துவ நிலையம், வளிமண்டலவியல் திணைக்களம், தேசிய கட்டிட ஆய்வு நிலையம், தேசிய அனர்த்த நிவாரண சேவைகள் நிலையம், உட்பட ஏனைய நேர்வரிசை அமைச்சுக்களுக்கு ஆற்றுப்படுத்தப்பட்டன. 2012இல் கிடைத்த முறைப்பாடுகளின் எண்ணிக்கை 81 ஆகும் என்பதுடன் 2013இல் இது 35 ஆக குறைந்துள்ளன. அமைச்சின் தலைமையில் நாடளாவிய ரீதியில் மேற்கொள்ளப்பட்டு வரும் விழிப்புணர்வூட்டும் நடவடிக்கைகள் மற்றும் மாவட்ட செயலகங்களில் செயற்படும் மாவட்ட அனர்த்த சேவைகள் நிலையத்தின் உத்தியோகத்தர்களின் செயற்பாடுகள் என்பன திறனுடன் மேற்கொள்ளப்படுவதை இது பிரதிபலிக்கின்றது.

- ✓ **வினைத்திறன் / முகாமைத்துவ நிகழ்ச்சித்திட்டம்**

வழிமுறைகள் மற்றும் செயலாற்று விதி முறைகள் என்பவற்றை விருத்தி செய்தல் பயிற்சி நெறிகளுக்காக பல்கலைக்கழக விரிவுரையாளர் ஒருவரை தொடர்புபடுத்திக் கொள்வதற்காக பொது நிருவாக அமைச்சுக்கு கோரிக்கை விடுக்கப்பட்டது. அமைச்சு மற்றும் அதன் கீழ் உள்ள நான்கு நிறுவனங்களின் பிரஜைகள் சேவை வழங்கல் பிரகடன மூன்று மொழிகளிலும் தயாரித்து அதனை இணையத்தளத்தில் உள்ளடக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. வளங்களை பயன்படுத்தும்போது அதனை சிக்கனமாக மேற்கொள்ளும் நோக்குடன் பாவிக்க முடியாத கடதாசிகளை மீள் சுழற்சிக்கு உட்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

**பயிற்சி நெறிகள்**

- ➢ **உள்ளூர்**

அமைச்சு அதிகாரிகளின் ஆற்றலை விருத்தி செய்யும் வகையில் நீண்டகால பயிற்சி நெறிக்காக உத்தியோகத்தர் ஒருவரும் தமிழ் மொழி பயிற்சிக்கு 30 உத்தியோகத்தர்களும் குறுகியகால பயிற்சி பாடநெறிக்கு 8 உத்தியோகத்தர்களும் தெரிவுசெய்யப்பட்டனர்.

- ➢ **வெளிநாட்டு**

அமைச்சினை பிரதிநிதித்துவப்படுத்தி வெளிநாட்டு மாநாடுகள், கூட்டங்கள், கருத்தரங்குகள் 13 பயிற்சி செயலமர்வுகள் என்பவற்றில் 09 உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர்.

➢ **அமைச்சரவைப் பத்திரங்களும் சுற்று நிருபங்களும்**

| தொ. இல. | விடயம் | அமைச்சரவை அங்கீகாரத்துக் காக அனுப்பிய திகதி | அமைச்சரவை தீர்மான இலக்கமும் அனுமதிக்கப்பட்ட திகதியும் |
|---|---|---|---|
| 01 | தேசிய கட்டிட ஆராய்ச்சி நிலையத்தின் 2011ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கையை பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கான அமைச்சரவைப் பத்திரம் | 2014.01.22 | அமைப/14/0093/548/001<br>2014.01.30 |
| 02 | அனர்த்த முகாமைத்துவ அமைச்சரின் ஆலோசகர் பதவிக்கு நியமிக்கப்பட்டுள்ள திரு. B.H.M.N. ரத்னசிறியின் ஒப்பந்தக் காலத்தை நீடித்தல் | 2014.01.23 | அமைப/14/0177/548/002<br>2014.02.13 |
| 03 | அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் பணிப்பாளர் நாயகப் பதவிக்கு நியமித்தல் திரு. L.B.R. மார்க். | 2014.05.21 | அமைப/14/0639/548/003<br>2014.06.19 |
| 04 | இலங்கை அனர்த்த முகாமைத்துவம் தொடர்பான விரிவானதிட்டம் 2014-2018 | 2014.06.20 | அமைப/13/1829/548/012-1<br>2014.07.17 |
| 05 | வளிமண்டலவியல் திணைக்களத்தின் பணிகள் தொடர்பாக ஆராய்வதற்கான புத்திஜீவிகள் குழுவுக்கு செலுத்தல்களை மேற்கொள்ளல் | 2014.07.09 | அமைப/14/0920/548/004<br>2014.08.07 |
| 06 | 2014 தேசிய பாதுகாப்பு தின அனுஷ்டிப்பு | 2014.09.15 | அமைப/14/1318/548/005<br>2014.09.30 |
| 07 | தேசிய கட்டிட ஆய்வு நிலையத்தின் 2012ஆம் ஆண்டறிக்கையை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தல் | 2014.10.03 | அமைப/14/1674/548/007<br>2014.12.04 |
| 08 | இயற்கை அனர்த்தங்கள் தொடர்பாக துரித நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான சார்க் ஒப்பந்தத்தை நடைமுறைப்படுத்துவதற்கு அமைச்சரவையின் அனுமதியைப் பெறல். | 2014.10.16 | அமைப/13/1758/548/003-11<br>2014.10.30 |
| 09 | 2014.10.29 ஆந் திகதி கொஸ்லந்த மீரிபெத்தயில் இடம்பெற்ற மண் சரிவினால் உயிரிழந்தவர்களுக்கான மரணச்சடங்கு நிதி உதவிகளை வழங்குதல் மற்றும் மருத்துவ உதவிகளை வழங்குதல் | 2014.11.27 | அமைப/14/1726/548/008<br>2014.12.17 |
| 10 | மண்சரிவு அனர்த்தங்களுக்குள்ளாகும் மக்களின் பாதிப்புக்களை குறைத்தல் | 2014.11.25 | அமைப/14/1727/548/009<br>2014.12.17 |
| 11 | தேசிய கட்டிட ஆய்வு நிலையத்தின் விஞ்ஞானிகளுக்கு தொழில் கொடுப்பனவுகளை வழங்குதல் | 2014.12.16 | அமைப/14/1843/548/010<br>2014.12.23 |

## ➢ பண்ட ஆய்வு பணிகளின் முன்னேற்றம்

2014 ஆம் ஆண்டு அமைச்சில் இருக்கும் சகல பண்டங்களும் ஆய்வுக்கு உட்படுத்தி அதன் அறிக்கை கணக்காய்வு அதிபதிக்கு அனுப்பிவைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. நியமிக்கப்பட்ட குழுவொன்றினால் இனங்காணப்பட்ட கடிதக்கோவைகளை அழைப்பதற்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

## ➢ அனர்த்த முகாமைத்துவம் தொடர்பான சர்வதேச மாநாடு – 2014



✓ "எதிர்காலத்தில் எமக்கான பாதுகாப்பான இலங்கை" என்ற தொனிப்பொருளில் 2014 செப்டெம்பர் 24, 25 மற்றும் 26 ஆகிய திகதிகளில் சர்வதேச மாநாடொன்று பண்டாரநாயக்க ஞாபகார்த்த மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது. இந்த சர்வதேச மாநாட்டின் அடிப்படை நோக்கம் 2004இல் ஏற்பட்ட சுனாமி அனர்த்தத்தின் பின்னர் அனர்த்த முகாமைத்துவ அமைச்சு மற்றும் அதனுடன் சம்பந்தப்பட்ட நிறுவனங்கள் வேறு நிறுவனங்கள் மற்றும் உள்நாட்டு வெளிநாட்டு தொண்டர் நிறுவனங்களினால் நடைமுறைப்படுத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்கள் தொடர்பாக கற்றுக்கொண்ட பாடங்கள் சம்பந்தமாக மீளாய்வுகள் செய்யப்பட்டன.

இதன்போது வெளிநாட்டு வளவாளர்களின் பங்களிப்புடன் 27 தொனிப்பொருள்களின் கீழ் விரிவுரைகள் நடத்தப்பட்டன. மேலும் இதில் அனர்த்த முகாமைத்துவம் தொடர்பாக பணியாற்றும் உள்நாட்டு மற்றும் சர்வதேச தரத்திலான 450 நிறுவனங்களின் செயற்பாட்டாளர்கள் இதில் கலந்துகொண்டனர். இதில் நிதி அனுசரணையாளர்களாக இலங்கை செஞ்சிலுவை சங்கம் உட்பட வெளிநாட்டு நிதி உதவி வழங்கும் நிறுவனங்கள் செயற்பட்டதுடன் உள்நாட்டு தொண்டர் அமைப்புக்களின் அனுசரணையும் கிடைத்தது.

Disaster Management
CONFERENCE 2014
The future we want - A safer Sri Lanka
24-26 September 2014 | BMICH, Colombo - Sri Lanka

- **தேசிய பாதுகாப்பு தினம்**

"தேசிய பாதுகாப்பு தினம்" இதனை வருடாந்தம் நடாத்துவதற்கான காரணம் இயற்கையினாலும் மனிதர்களினாலும் ஏற்படும் அனர்த்தங்கள் தொடர்பாக மக்களுக்கு அறிவூட்டல், அது தொடர்பாக அவர்களது கவனத்தை ஈர்த்தல், அனர்த்த பாதிப்புக்களை குறைத்தல், தடுத்தல், முன் ஆயத்தம் தொடர்பாக மக்கள் மத்தியில் சிந்தளை மாற்றத்தை ஏற்படுத்தல் விசேடமாக 2004 டிசெம்பர் மாதம் 26ஆந் திகதி ஏற்பட்ட சுனாமி போன்ற அனர்த்தங்களின் போது அதனை எதிர்கொள்வதற்கான ஆற்றலை மேம்படுத்தல் என்பனவாகும். இது தொடர்பான நிகழ்வு அம்பாந்தோட்டை மஹிந்த ராஜபக்ஷ கருத்தரங்கு மண்டபத்தில் சபாநாயகர் கௌரவ சமல் ராஜபக்ஷ அவர்களின் தலைமையில் நடைபெற்றது. அதன்போது பின்வரும் செயற்பாடுகள் இடம்பெற்றன.

- நாடு முழுவதிலும் அனர்த்தங்கள் தொடர்பாக அறிவூட்டும் நிகழ்ச்சித்திட்டங்களை வளிமண்டலவியல் திணைக்களம், அனர்த்த முகாமைத்துவ நிலையம் தேசிய அனர்த்த சேவைகள் நிலையம் தேசிய கட்டிட ஆய்வு நிலையம் ஆகிய நான்கு நிறுவனங்கள் ஊடாக மேற்கொள்ளப்படன. அதன்போது மாவட்ட, பிரதேச மற்றும் உள்ளூராட்சி மட்டத்திலான பிரதிநிதிகள் மற்றும் உத்தியோகத்தர்களுக்கு அறிவூட்டுதல், அனர்த்த முகாமைத்துவம் தொடர்பாக, பாடசாலைகள், தொண்டர் நிறுவனங்கள், மற்றும் தன்னார்வ இளைஞர் அமைப்புக்களை ஏற்படுத்தல், தீ காப்புறுதி, முதலுதவி மற்றும் பாசறை முகாமைத்துவம் உயிர் பாதுகாப்பு, தேடுதல், மீட்பு, ஆபத்துமிக்க நீர் நிலைகள் தொடர்பாக அறிவூட்டுதல் அதற்கான அறிவித்தல் பலகைகளை பொருத்துதல், சுனாமி ஒத்திகை, மண்சரிவு ஒத்திகை போன்றவற்றை நடைமுறைப்படுத்தப்பட்டன.

- அனர்த்த முகாமைத்துவ நிலையம் மற்றும் கல்வி அமைச்சு என்பன இணைந்து தேசிய மட்டத்திலான ஓவிய கட்டுரைப்போட்டிகளை ஒழுங்குசெய்து அதில் வெற்றி பெற்றவர்களுக்கு சான்றிதழ்கள் மற்றும் பரிசில்களை வழங்கப்பட்டன.

- அனர்த்த நிலைமைகளின்போது நிறுவனத்தில் செயற்பட்ட சிறந்த உத்தியோகத்தரை தெரிவுசெய்து சான்றிதழ்கள் மற்றும் பரிசில்கள் வழங்கப்பட்டன.


- சிறந்த அனர்த்த ஊழியரை தெரிவுசெய்து பரிசுகள், பணப்பரிசு மற்றும் சான்றிதழ்களை வழங்குதல்


- மீரியபெத்த மண்சரிவினால் பெற்றோரை இழந்த மூன்று பிள்ளைகள் உட்பட அனைத்து பிள்ளைகளுக்கும் வங்கி கணக்குப் புத்தகங்களை வழங்குதல். தேசிய கட்டிட ஆய்வு அமைப்பினால் நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் அனர்த்தங்களை தாக்குப்பிடிக்கக் கூடிய வீடுகள் அமைப்பதை அடையாளப்படுத்தி 3 வீடுகளுக்கான திறப்புக்களும் வழங்கப்பட்டன.

➢ **“தேசத்துக்கு மகுடம்” அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டக் கண்காட்சி**

தேசத்துக்கு மகுடம் கண்காட்சி ஓர் கண்காட்சியாக மாத்திரமல்ல நாட்டின் அபிவிருத்திக்கும் தோள்கொடுக்கும் வகையில் நாட்டின் பல்வேறு பிரதேசங்களில் இதனை நடைமுறைப்படுத்தும் வகையில் இது ஆரம்பிக்கப்பட்ட 2010 தொடக்கம் இதுவரை 05 ஆண்டுகளுக்குள் கண்டி, புத்தளம், அநுராதபுரம், அம்பாறை, குளியாப்பிட்டி ஆகிய பகுதிகளில் கண்காட்சியை முன்னிட்ட அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. அந்த சந்தர்ப்பத்தில் பிரதேச மட்டத்தில் அனர்த்தங்களை குறைப்பதற்கான சிறு அளவிலான கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்தல், நீர் தெளித்தல் உபகரணங்களை வழங்குதல், மழை நீர்த்தாங்கிகளை வழங்குதல், வானிலை மற்றும் இயற்கை அனர்த்தங்கள் தொடர்பில் அறிவூட்டுதல் மழை அளவீட்டு மாணிகளைப் பொருத்துதல், மண்சரிவு அபாயங்களை குறைப்பதற்கான திட்டங்களை நடைமுறைப்படுத்தல் உட்பட பல்வேறு வழிகள் மூலம் மக்களுக்கு விளக்கமளிக்கப்பட்டன.

2014 இல் இந்த தேசிய அபிவிருத்தித் திட்டங்கள் குருநாகல், கேகாலை, புத்தளம், ஆகிய மூன்று மாவட்டங்களையும் உள்ளடக்கும் வகையில் கருத்திட்டங்கள் மற்றும் வேலைத்திட்டங்கள் என்பன நடைமுறைப்படுத்தப்பட்டன. இதற்காக அமைச்சின் கீழ் உள்ள நான்கு நிறுவனங்களின் ஒத்துழைப்பும் பெறப்பட்டது. இதன்கீழ் அனர்த்தங்களுக்கு ஈடுகொடுக்கும் மூன்று விடுகளை நிர்மாணித்ததோடு குறிப்பிட்ட அனைத்து பிரதேச செயலகப் பிரிவுகளும் உள்ளடங்கும் வகையில் 15 மழை அளவீட்டுக் கருவிகள் பொருத்தப்பட்டன. அத்துடன் அனர்த்தங்களை குறைப்பதற்கான 14 திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டன. அனர்த்தங்களின்போது பயன்படுத்தக்கூடிய உபகரணங்கள் பிரதேச செயலாளர் பிரிவு அடிப்படையில் நடைமுறைப்படுத்தப்பட்டன. அதேபோன்று அனர்த்த முகாமைத்துவம் தொடர்பாக விளக்கமளிப்பதற்காக அமைச்சின் கீழ் உள்ள நிறுவனங்களுடன் இணைந்த திட்டங்களும் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன.


மீண்டுவரும் செலவினங்களுக்கான நிதி ஒதுக்கங்களும் செலவுகளும் (ரூ.மி.) 2011 - 2014
மீண்டுவரும் கிடைப்பனவுகள்
மீண்டுவரும் செலவினம்
970.88
765.84
314.66
283.48
401.3
321.94
787.45
778.25
2011
2012
2013
2014


மூலதன செலவுகளுக்கான நிதி ஒதுக்கங்களும் செலவுகளும் (ரூ.மி) 2011 - 2014
மூலதன கிடைப்பனவு
மூலதன செலவுகள்
521.73
507.71
160.63
130.29
598.82
584.75
2158.4
2057.1
2011
2012
2013
2014

## 02. திட்டமிடலும் அபிவிருத்திப் பணிகளும்

- **அபிவிருத்தி கருத்திட்ட மேற்பார்வை**

அமைச்சு மற்றும் அதனுடன் இணைந்த வளிமண்டலவியல் திணைக்களம், அனர்த்த முகாமைத்துவ நிலையம், தேசிய கட்டிட ஆய்வு அமைப்பு, தேசிய அனர்த்த நிவாரண சேவைகள் நிலையம் என்பன உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு பணாத்தைப் பயன்படுத்தி மேற்கொள்ளும் அபிவிருத்தித்திட்டங்கள் / கருத்திட்டங்கள் என்பவற்றை அபிவிருத்தி மற்றும் திட்டமிடல் பிரிவு ஒருங்கிணைத்து வருகின்றது.

தேசிய திட்டமிடல் திணைக்களத்தின் அனுமதிக்காக சிபாரிசுகளுடன் கருத்திட்டங்களை சமர்ப்பித்தல், நிதி நிறுவனங்களுடன் (Donor Agencies) தேவையான ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளாமல் திறைசேரியிலிருந்து தேவையான நிதியை உரிய நேரத்தில் விடுவித்துக்கொள்ளல் என்பவற்றுக்கான ஒருங்கிணைப்பு பணிகளை மேற்கொள்ளல் அதேபோன்று அபிவிருத்தி திட்டங்கள் / கருத்திட்டங்களுடன் என்பவற்றுடன் தொடர்பான முன்னேற்ற மீளாய்வுப் பணிகளை மேற்கொண்டு அதன் முன்னேற்றத்தை மதிப்பிடுவதன் மூலம் எதிர்பார்த்த இலக்குகள் / நோக்கங்கள் என்பவற்றை அடைதல் மற்றும் ஏற்பட்டுள்ள பிரச்சினைகளை தீர்த்துக்கொள்வதற்குத் தேவையான ஆலோசனைகள் மற்றும் வழிகாட்டல்கள் வழங்கப்பட்டதுடன் அது குறிப்பிட்ட பிரதேசங்களில் அனர்த்த பாதிப்புக்களை குறைப்பதற்கு பெரிதும் வழிவகுத்தது.

2014ஆம் ஆண்டில் கருத்திட்ட மேற்பார்வைகள் மற்றும் 12க்கும் அதிகமான செயற்பாட்டுக் குழுக்கூட்டங்கள் நடத்தப்பட்டுள்ளதுடன் அதன்போது குறிப்பிட்ட கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்துவது தொடர்பாக கலந்துரையாடி 2014ஆம் ஆண்டு பூர்த்தி செய்யப்பட்ட கருத்திட்டங்களின் முன்னேற்றம் தொடர்பாக திருப்தியடைய முடிந்ததுடன் தொடர்ந்தும் நடைமுறைக்கு வரவேண்டிய கருத்திட்டங்களை துரிதமாக பூர்த்தி செய்வதற்கான ஆலோசனைகள் மற்றும் வழிகாட்டல்களை செய்வதற்கும் தீர்மானிக்கப்பட்டது.

அதற்கு மேலதிகமாக 2014 இல் பின்வரும் கருத்திட்டங்களை முறையாக மேற்பார்வை செய்ததன் மூலம் கருத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்ட பிரதேசங்களில் வாழும் மக்களின் சமூக மற்றும் பொருளாதார நிலைமைகளை மேம்படுத்திக்கொள்ள முடிந்தது.

- மண்சரிவு ஏற்படக்கூடிய பிரதேசங்களில் விசேட மேற்பார்வை நடவடிக்கைகளை மேற்கொள்ளல்

(கண்டி, குருநாகல், அம்பாந்தோட்டை)

- தியதலாவ பஸ்தரிப்பு நிலையத்துக்கருகில் உள்ள நிறுவனத்தினை பலமுள்ளதாக மாற்ற நடவடிக்கை எடுத்தல்

- பெசன்வத்த பிரதேசத்தில் நிலத்தினை பலமுள்ளதாக மாற்றுவதற்கான கருத்திட்டம்

- புஞ்சி ரத்தொட்ட அனர்த்த தணிப்பு நடவடிக்கைகள்

- மண்சரிவு அனர்த்தங்களை தணிப்பதற்கான ஒருங்கிணைந்த கருத்திட்டம் கட்டம் - 01

- **2015இல் நடைமுறைப்படுத்த உத்தேசித்த கருத்திட்டங்களுக்கான அனுமதி**

நாட்டில் ஏற்படும் அனர்த்தங்களை குறைப்பது தொடர்பாக விசேட கவனம் செலுத்தப்பட்டு மாவட்ட செயலாளர்களின் அனுமதியுடன் பெறப்பட்ட கருத்திட்டங்கள் முன்னாயத்த திட்டமிடலின் கீழ் 08 கருத்திட்டங்கள் முன் அறிவித்தல்கள் மற்றும் அவசர கருமமாற்றலின் கீழ் 04 கருத்திட்டங்களும் பயிற்சி மற்றும் கற்றல் தொடர்பாக 05 கருத்திட்டங்களும் அனர்த்த தணிப்புக்கான 09 கருத்திட்டங்களும் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தியின் கீழ் 05 கருத்திட்டங்களுமாக 2900.65 மில்லியன் ரூபா பெறுமதியான 31 கருத்திட்டங்கள் நிதி திட்டமிடல் அமைச்சின் அனுமதிக்காக ஆற்றுப்படுத்தப்பட்டது.

- **இலங்கையில் அனர்த்த முகாமைத்துவும் தொடர்பான விரிவானதிட்டம் (2014-2018)**

2013 இல் ஆரம்பிக்கப்பட்ட இந்த அனர்த்த முகாமைத்துவம் தொடர்பான விரிவான திட்டம் தேசிய திட்டமிடல் திணைக்களத்தின் அனுமதி பெறப்பட்டதன் பின்னர் அதில் 43 பிரதான வெளியீட்டு துறைகள் தொடர்பாக பொறுப்புக்கூற வேண்டிய 45 பங்காளர் நிறுவனங்களின் கீழ் இனங்காணப்பட்ட செயற்பாடுகளை 2014இல் நடைமுறைப்படுத்துவது ஆரம்பிக்கப்பட்டது. இதற்காக ஐக்கிய நாடுகள் சபை நிதியத்தின் ஊடாக 2014இல் ஒதுக்கப்பட்ட பணம் 38.00 மில்லியன் ரூபாவாகும். அதன் நிதி முன்னேற்றம் 100% ஆகும். என்பதுடன் பௌதீக முன்னேற்றம் பின்வருமாறு அடைய முடிந்தது.

01. இலங்கையின் அனர்த்த முகாமைத்துவம் தொடர்பான விரிவான திட்டத்துடன் சம்பந்தப்பட்ட நிகழ்ச்சித்திட்ட முகாமைத்துவப் பிரிவு தேவையான அடிப்படை நிதி வளத்துடன் ஸ்தாபிக்கப்பட்டது. செலவு 2.27 மில்லியன் ரூபாவாகும்.

02. தேசிய கட்டிட ஆய்வு நிலையத்தினால் இனங்காணப்பட்டுள்ள மண்சரிவு அபாயமுள்ள வலயங்களுக்காக முன்னறிவித்தல் கட்டமைப்பினை பலப்படுத்துவதற்கான 20 தன்னியக்க மழை அளவீட்டுக் கருவிகளை பொருத்தும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டன. இந்த கருத்திட்டத்தின் பௌதீக முன்னேற்றம் 60% என்பதுடன் 2015 மார்ச் மாதம் முடிவடையும் போது கருத்திட்டத்தின் பணிகளை பூர்த்தி செய்ய திட்டமிடப்பட்டது. மதிப்பீட்டுப் பெறுமதி 20 மில்லியன் ரூபாவாகும்.

03. வெள்ளப்பெருக்கு தாக்கம் பெருமளவில் காணப்படும் 17 நகரங்கள் இனங்காணப்பட்டதுடன் அந்த நகரத்தை அண்டிய பிரதேசங்களுக்கு (Risk Profiles) அனர்த்த அபாயம் தொடர்பான விபர கட்டமைப்பினை ஏற்படுத்தும் வகையில் 1: 5000 அடிப்படை வரைபட தயாரிப்பு நடவடிக்கைகள் நில அளவை திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்டது. இந்த திட்டத்துக்கான மொத்த செலவினம் 9.6 மில்லியன் ரூபா ஆகும் என்பதுடன் இதில் 6.6 மில்லியன் ரூபா தற்போது அந்த திணைக்களத்துக்கு கிடைத்துள்ளது.

04. அனர்த்த முகாமைத்துவ நிலையத்தினால் தயாரிக்கப்பட்டுள்ள தேசிய அவசரகால கருமமாற்றும் திட்டத்தை (NEOP) செயலாற்று ரீதியில் நடைமுறைப்படுத்துவதற்காக தயாரிக்கப்பட்ட திட்டங்கள் செயற்படுத்துவது ஆரம்பிக்கப்பட்டதுடன் இதற்காக 1.0 மில்லியன் ரூபா வழங்கப்பட்டது. இது தொடர்பான செயலமர்வு பதுளை மாவட்ட செயலாளரின் தலைமையில் பதுளை மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது.

05. தேசிய அனர்த்த நிவாரண சேவைகள் நிலையத்தின் அனர்த்தத்துக்குப் பின்னரான அனர்த்த நிவாரண சேவைகள் பணிகளை முறையாக முன்னெடுப்பதற்காக நிறுவப்பட்ட நிவாரண தகவல் கட்டமைப்பினை" பலப்படுத்துவதற்காக 23 மடிக்கணினிகளை கொள்வனவு செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதுடன் அதற்காக 1.72 மில்லியன் ரூபா செலவிடப்பட்டது.

06. வளிமண்டலவியல் திணைக்கள உத்தியோகத்தர்களின் ஆற்றல் விருத்திக்காக இந்திய வளிமண்டலவியலாளர்களின் வள பங்களிப்புடன் திட்டமிடப்பட்ட பயிற்சி நெறிகளுக்கு குறிப்பிட்ட அனுமதி பெறப்பட்டது.

07. அனர்த்த முகாமைத்துவம் தொடர்பான விரிவான திட்டத்தின் பங்காளர் நிறுவனமான நீர்ப்பாசன திணைக்களத்துக்கு கையளிக்கப்பட்டுள்ள செயற்பாடுகளுக்கமைய அந்த திணைக்களத்தினால் தற்போதுள்ள வெள்ளப்பெருக்கு பாதுகாப்பு கட்டளைச் சட்டங்களை திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

**அறிவூட்டும் நிகழ்ச்சித்திட்டம்**



**தன்னியக்க மழை அளவீட்டு கருவிகளை பொருத்துதல்**





## 03. கணக்கீட்டு நடவடிக்கைகள்

➢ **செலவீட்டு மதிப்பீடு - 2014** ரூபா

| | அமைச்சு அலுவலகம் 106 – 01 - 01 | | நிரவாக மற்றும் தாபன சேவைகள் 106 – 01 – 02 | |
|---|---|---|---|---|
| | நடைமுறை | மூலதனம் | நடைமுறை | மூலதனம் |
| மதிப்பீட்டு ஒதுக்கம் | 54,050,000.00 | 6,680,000.00 | 66,835,000.00 | 61,468,000.00 |
| நி.பி.66இன் கீழான மாற்றங்கள் மற்றும் குறைநிரப்பு நிதி ஒதுக்கீடு | 367,000.00 | 374,000.00 | | |
| தேறிய ஒதுக்கம் | 54,417,000.00 | 4,054,000.00 | 68,003,000.00 | 61,920,000.00 |
| செலவு | 52,865,092.00 | 3,911,067.00 | 63,000,636.00 | 60,734,865.00 |
| செலவு வீதம் | 97% | 96% | 93% | 98% |

➢ **செலவுகளுக்கான நிதி முகாமை**


| குறியீடு | செலவு நிதி முகாமை | தேறிய ஏற்பாடு | உண்மையான செலவினம் | செலவு வீதம் |
|---|---|---|---|---|
| 11 | உள்நாட்டு நிதி | 149,926,000.00 | 142,511,660.00 | 95% |
| 12 | வெளிநாட்டு கடன் உதவி | | | |
| 13 | வெளிநாட்டு நிதி வழங்கல் | 38,468,000.00 | 38,000,000.00 | 99% |

➢ **அரச உத்தியோகத்தர்களின் முற்பணக் கணக்குகள்** ரூபா

| | செலவுகளின் உச்ச வீதம் | கிடைப்பணவு குறைதல் | ஆகக்கூடிய வரவு மீதி எல்லை |
|---|---|---|---|
| கணக்கு ஒதுக்கீட்டுச் சட்டத்தினால் அதிகாரம் வழங்கப்பட்ட எல்லை | 7,000,000.00 | 2,500,000.00 | 16,000.000.00 |
| 2014.12.31ஆந் திகதிக்கு உண்மையான மீதி | 6,815,248.00 | 3,714,426.00 | 12,912,245.50 |

➢ **2014.12.31 ஆந் திகதியில் உள்ளவாறான கடன் / முற்பணம்**

| **கடன் தொகை** | **கடன் அளவு (ரூபாவில்)** | **கடன் பெற்றோர் எண்ணிக்கை** |
|---|---|---|
| பண்டிகை முற்பணம் | 1,078,000.00 | 213 |
| விசேட முற்பணம் | 92,500.00 | 37 |
| இடர் கடன்கள் | 5,638,748.00 | 51 |
| மிதிவண்டி கடன் | 6,000.00 | 01 |




➢ 2014ஆம் ஆண்டுக்கான ஒதுக்கீட்டு கணக்குகள் மற்றும் அரச உத்தியோகதத்ர்களுக்கான முற்பண "பீ" கணக்குகள் 2014.12.31ஆந் திகதிக்கு தயாரிக்கப்பட்டு தற்போது கணக்காய்வு அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

**04. பெறுகைகள் கோரல்**

- ✓ 2014 இல் அமைச்சின் பெறுகைகள் கோரல் தொடர்பான நடவடிக்கைகள் தொடர்பான விபரங்கள் (மில். ரூபா)

**<u>அமைச்சு அலுவலகம்</u>**

**1201 – எழுதுகருவிகள்**

நிதி ஒதுக்கம் - 2.09
செலவினம் - 2.09
நிதி முன்னேற்றம் - 100%

**2102 – தளபாடங்கள், அலுவலக உபகரணங்கள்**

நிதி ஒதுக்கம் - 1.12
செலவினம் - 1.09
நிதி முன்னேற்றம் - 98%

**2103 - இயந்திர உபகரணங்கள்**

நிதி ஒதுக்கம் - 1.25
செலவினம் - 1.23
நிதி முன்னேற்றம் - 99%

**<u>அமைச்சு அலுவலகம்</u>**

**1201 – எழுது கருவிகள்**

நிதி ஒதுக்கம் - 1.40
செலவு - 1.40
நிதி முன்னேற்றம் - 100%

**2102 – தளபாடங்களும் அலுவலக உபகரணங்களும்**

நிதி ஒதுக்கம் - 0.5
செலவு - 0.5
நிதி முன்னேற்றம் - 100%

**2103 - இயந்திர உபகரணங்கள்**

நிதி ஒதுக்கம் - 0.6
செலவு - 0.6
நிதி முன்னேற்றம் - 100%

## 05. உள்ளக கணக்காய்வு பணிகள்

2014ஆம் ஆண்டு தொடர்பாக அனர்த்த முகாமைத்துவ அமைச்சு மற்றும் தேசிய அனர்த்த நிவாரண சேவைகள் நிலையம் தொடர்பாக 03 கணக்காய்வுகள் மேற்கொள்ளப்பட்டதுடன் 06 விசேட ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. கணக்காய்வுகள் மேற்கொள்ளப்பட்ட துறைகள் பின்வருமாறு.

01. வளிமண்டலவியல் திணைக்களத்துக்குரிய மத்தள வளிமண்டலவியல் நிலையம் தொடர்பான ஆய்வு

02. அனர்த்த முகாமைத்துவ நிலையத்துக்குரிய அம்பாந்தோட்டை மாவட்ட ஒருங்கிணைப்பு பிரிவு தொடர்பான விசேட ஆய்வு

03. வளிமண்டலவியல் திணைக்களத்தினால் நடைமுறைப்படுத்தப்பட்ட டொப்லர் ரேடார் கட்டமைப்பு தொடர்பான கருத்திட்டம்.

04. கொழும்பு மாவட்ட உள்ளக கணக்காய்வு தொடர்பான நிகழ்ச்சித்திட்டம்

05. அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் முன் ஆயத்த திட்டமிடல் நிகழ்ச்சித்திட்டம் தொடர்பான ஆய்வு

06. அனர்த்த முகாமைத்துவ நிலையத்தினால் 2014ஆம் ஆண்டுக்காக நடைமுறைப்படுத்தப்பட்ட அனர்த்த முகாமைத்துவக் கருத்திட்டம் தொடர்பான ஆய்வு

இதற்கு மேலதிகமாக முகாமைத்துவ மற்றும் கணக்காய்வு தொடர்பான 04 கூட்டங்கள் நடத்தப்பட்டன. முன்வைக்கப்பட்ட கணக்காய்வு விசாரணைகளின் எண்ணிக்கை 56 ஆகும். இந்த 56 கணக்காயவு விசாரணைகளுக்கும் பதில்கள் வழங்கப்பட்டன.

# 11 பகுதி

# தேசிய அனர்த்த நிவாரண சேவைகள் நிலையம்

## அறிமுகம்

தேசிய அனர்த்த நிவாரண சேவைகள் நிலையம் 1996ஆம் ஆண்டு சமூக சேவைகள், மற்றும் சமூக நலன்புரி அமைச்சின் கீழ் நிருவப்பட்டது. நிவாரணங்கள், புனர்வாழ்வு மற்றும் புனரமைப்பு பணிகளை திட்டமிடல் மற்றும் நடைமுறைப்படுத்துவதற்காக அது 2005.12.08ஆந் திகதி 1422/22ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி மூலம் அனர்த்த நிவாரண சேவைகள் அமைச்சின் கீழ் கொண்டுவரப்பட்டது. 2007.01.09ஆந் திகதி 1482/9ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல் மூலம் தேசிய அனர்த்த சேவைகள் நிலையம் என பெயரிடப்பட்டு மீள்குடியேற்ற அனர்த்த நிவாரண சேவைகள் அமைச்சின் கீழ் கொண்டுவரப்பட்டது. 1651/220ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல் மூலம் 2010.04.30ஆந் திகதி தொடக்கம் நடைமுறையிலிருக்குமாறு அனர்த்த முகாமைத்துவ அமைச்சின் கீழ் செயற்பட்டது.

